DUPLICATE

18 AUG 1999 PERIODICALS DIVISION

# JAFFNA COLLEGE Board Nominates PRINCIPALS NEW & VICE

**The** Board of Directors of Jaffna College conducted a Special Meeting presided over by the Bishop on Thursday the 22nd July 1999. The Directors unanimously decided to appoint Rev A. A. Paul as Principal and Mr N. A. Vimalendran as Vice Principal of the College. They will assume duties in February 2000.

## THE PRINCIPAL DESIGNATE

Rev A A Paul is 52 years old. He is an Alumnus of Jaffna College. He entered the University of Ceylon, Peradeniya in 1966 and obtained a Special Science Degree in Chemistry with Physics as subsidiary. He also holds M. Phil. in Chemistry from Colombo University, Post Grad. Dip. in Education from Jaffna University. B. D. (Serampore Senate) and Th. M. Degree from Princeton Theological Seminary.



He followed International Atomic Engineering Agency (I A E A) Fellowship Programme in X-Ray Florescence Analitical technique at University Nairobi, Nuclear Science Laboratory, Kenya in 1983. He is a member of Institute of Chemistry, Ceylon and a Chartered Chemist

Rev Paul started his career as an Assistant Lecturer in Bio Chemistry, University of Ceylon Peradeniya in November 1970. Then he joined Ceylon Mineral Sands Corporation as Chemist in November 1971. He was promoted as Chief Chemist in May 1980. As he felt called by God to do teaching ministry he resigned from his post and joined Jaffna College as Chemistry teacher in 1985. He was ordained a deacon and was then as Presbyter of the Jaffna Diocese of the Church of South India in January 1991 and May 1992 respectively. He was appointed the Chaplain of the College in 1993 and then appointed the Co-Vice Principal in May 1994. He is a member of many Boards and Committees of the Diocese. At present he is the President of Jaffna Christian Union.

He married Vinothini Samuel, daughter of Mr: & Mrs Edwin Samuel of Manipay and a great grand daughter of Mr. William Mather and J. R Arnold (A Sathasivampillai).

The Pauls have three sons, Two of them are students of Jaffna College.

## THE VICE PRINCIPAL

Mr. Noel Arasaratnam Vimalendran is 45 years old. He had his early education at Drieberg College, Chavakachcheri. He joined Jaffna College to pursue his G C E Advanced Level studies In 1970. he secured B. Sc. Degree of the University of Peradeniya and obtained postgraduate diploma in Education at Jaffna University.



Mr. Vimalendran has served as Secretary and Treasurer of the Jaffna Diocese of the Church of South India. At present he is the Chairman of the Medical Board and Treasurer of Bishop Sabapathy

Contd to page 4

**THE MORNING STAR**

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 159 Jaffna Friday 30 th July 1999 No. 16

*RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE*

## Preacher at the Ordination Service

Rev. V. N. Tharmakulasingam B. Th. B. D. at present in the Faculty of the Christian Theological Seminary. Maruthanamadam, preached the sermon at the ordination service. He based his sermon, on the text St. John: 10:10:

The lessons were read by Mr. S. Nagiah (Anaikoddai) Mr. Landon Thevarajah (Udupiddy) and The Rev T. H. Vasanthakumar,

## New Education Offices

In accordance with the Educational Reforms, new Education offices were opned in three places in Vadamarachi. There are

1. Education Office, Point Pedro circuit
   Vadamarachi Hindu Ladies College
2. Education Office, Karaveddy Circuit
   Nelladdy Madhya Maha Vidiyalayam
3. Education Office, Maruthan keney Circuit
   Amban Agrarian Services Office.

## They Laid Hands:

The following Presbyters of the Jaffna Diocese of the Church of South India' laid their hands on the Ordinands along with the Bishop. Revds. V. Rajkumar, A. V. Jesuthasan, S. I. Anandarajan, N. T. Jeyanesan, T. E. Ashokumar, J. B. Thevarudchelvam and A. S. Thevagunananthan.

## They Presented the Candidates:

Revds. A. A. Paul, T. Thevanesan and V. Rajkumar presented the candidates at the Service. Rev. Arnold and Rev. A. A. Paul assisted the Bishop in the Holy Communion service. About 400 persons participated at the fellowship lunch in the Spaudling Home.

## A Skeleton in the Well

The Skeleton of a woman was found in a well at Sitpanai. in Velanai. The skeleton was brought to Teaching Hospital, Jaffna. and then sent to Colombo for further investigations

## *Increase in the Price of eggs.*

The Price of eggs in Jaffna has gone up from Rs. 6 50 to Rs. 10. 00. Lack of production has led to the sharp increase in prices.

## Dates to Remembes

**Aug 4:**
Workers Union (Vaddukoddai)

**Aug 11:**
Saraswathy Somasundaram Memorial. (Uduvil)

**Aug 26:**
Childrens Rally (Manipay)

**Sept 25:**
J. D. C. S. I: Festival (Vaddukoddai)

## *Sixthousand held up in Trincomalee:*

Sixthousand people of Jaffna have registered their names with the District Secretariat for passage to Jaffna. These people had gone to South, Sri Lanka on official and other duties. It has been reported that they will be given places in the next trip of the ship 'Lanka Muditha

## *Prices fixed for palmyrah and Coconut Toddy:*

The Asst. Commissioner Palmyrah and Coconut Boards in Jaffna in collaboration with the producers fixed the price fol Palmyrah toddy as Rs. 12/- per bottle and of Coconut toddy as Rs 15/- per bottle.

## Census In 2001

The Government of Sri Lanka is making arrangements to take censu of the population in 2001. After 1981, census was not taken because of Civil war.

## Boady Exhumed:

The Body of Ida Camalette who was killed after sexual abuse on 11 th July was exhumed in presence of Mr. M Ilancheliyan, District Judge, Mannar. The body was sent to Colombo for further investigations. Two soldiers have been taken for question ing in this incident.

"Vide Uthayan"

# எஸ். ஜே. எழுதுவது

வண ஜோன் பிக்னல் யாழ்ப்பாணக்கல்லூரி அதிபராக இருந்த காலம்.

சைவமாணவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் திருக்குறள் வகுப்புக்களை ஒழுங்கு செய்து அந்நூலைக் கற்று வந்தார்கள்.

ஒரு முறை வண ஜோன் பிக்னல் அவர்களும் இந்த வகுப்பிலிருந்து பாடங்கேட்டார். அன்று கற்பிக்கப்பட்ட குறள்

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ் வுலகு'

yosterday a man was and to-day he is not. That is the wonder of wonders in this world.

வண ஜோன் பிக்னல் இக்கவிதையை நன்கு ரசித்தார். ஆனால் அதிற் பொதிந்துள்ள தத்துவத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை, இதற்கு விடையாக

'காணப்படுபவைகள் அநித்தியம் காணப்படாதவைகளோ நித்தியம் 2கொரி 5 :18

என்ற வசனத்தைக் கூறினார்.

காணப்படுபவைகள் உலகம் சூரியன், சந்திரன, கடல், ஆறு மலை, வீடு, ஆடு, மாடு, முதலியன.

காணப்படாதவைகள் அன்பு, கோபம், சந்தோஷம், எரிச்சல, தட்பு, தயவு, பொறுமை முதலியன

உலோகாயுதர்கள் காணப்படுபவைகளோ நித்தியம் காணப்படாதவைகள் அநித்தியம் என்றும் வாதிடுவர்.

இன்று விஞ்ஞானம் காணப்படுபவைகள் அநித்தியம் என்று தெளிவாக விளக்குகின்றது.

நட்சத்திரங்கள் நித்தியமல்ல. அவை சில இன்று உருவாகிக் கொண்டிருக்கின்றன. சில செத்து மடியும் நிலைக்கு வந்து விட்டன. சூரியன் என்ற நமது நட்சத்திரம் கூட முதுமையடைந்து விட்டது. எரி நட்சத்திரமாக வீழ்ந்து மறைந்து விடும்

வரலாற்று ஆசிரியன் காணப்படுபவைகள் நித்தியம் இல்லை என்கிறான்.

எகிப்திய பாவிலோனிய ஆசிரிய, கிரேக்க, ரோம, ஸ்பானிய பேரரசுகள் முற்றாக மறைந்தொழிந்தன. ஆனால் காணப்படுபவைகள் அழிவதில்லை. கோள்களையும் நட்சத்திரங்களையும் இயக்கி அதன் அதன் இடங்களில் வைத்திருக்கும் சக்தி அழிவதில்லை உலகின் மரங்களையும் ஆறுகளையும் ஒழுங்கு படுத்தும் புவி ஈர்ப்பு அழிவதில்லை நட்சத்திரங்கள் சிறப்பானவை ஆனால் அவற்றை நிரைப்படுத்தும் கணிதப்போட்பாடுகள் அவற்றை விடச் சிறந்தன வல்லவா?

மலைச் சிகரம் மகத்தானது. ஆனால் அதன் அடிவாரத்தில் துளிர்க்கும் சிறிய வில்லி புஷ்பத்திலுள்ள உயிர் அதற்கில்லை. உயிருட்டல் ஈர்ப்பு முதலியன சடப்பொருள்களை அற்பமாக்கி விடுகின்றன.

மன்னவன் ஒருவன் கோடி ரூபாய் பணத்தைச் செலவு செய்து ஒரு அழகு மாடத்தைக் கட்டுகிறான். அவன் குழந்தை அந்த மாளிகையில் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது அழகுமாடத்தில் தீ பிடித்துக்கொள்கின்றது. மன்னவன் அசேதனப்பொருளாகிய அழகுமாடத்தைக் காப்பாற்றுவானா? அசேதனப் பொருளாகிய சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மலை, கடல், ஆறு, நாடு, என்பனவற்றை விட மனிதன் விசேடமானவன்! ஏனெனில் காணப்படாத அன்பு சந்தோஷம் நட்பு சயவு என்பன மனிதனிடத்தில் உண்டு. அசேதனப் பொருள்களில் இல்லை;

## திருவும் அருள்திருவும்



அருள்திரு: பாலஸ்தீனா விஜயம் அருமையாக இருந்தது. ஆனால் யோர்தான் நதியைக்கடக்க தோணிக்காரன் நூறு டொலர் அறவிட கேட்கிறான்

திரு: இயேசு ஏன் தண்ணீரின் மேல் நடந்தார். என்று இப்பதான் எனக்கு விளங்குது. - மணி

## 1998 ம் நோபல் பரிசு பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| இலக்கியம்: | ஜோஸ் சறமா கோ – | போர்த்துக்கல் |
| வைத்தியம்: | டாக்டர் றொபேர்ட் பேர்ச்கொட் | |
| | டாக்டர் லூயி இக்னரோ | |
| | டாக்டர் பெரிட் முராட் | அமெரிக்கா |
| பௌதிகம்: | றொபேர்ட் லோகிளின் | |
| | ஹோர்ஸ்ர் ஸ்ரோமர் | |
| | டானியல் ரூசிய் | அமெரிக்கா |
| இரசாயனம்: | வால்டர் ஜோன் | ஆஸ்திரியா |
| | ஜோன் போப்பிள் | இங்கிலாந்து |
| பொருளியல்: | அமர்தியா சென் | இந்தியா |
| சமாதானம்: | டேவிட் றிம்பிள் | |
| | ஜோன் ஹியூம் | அயர்லாந்து |

# மறைந்த சரஸ்வதி



உடுவில் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் 11 - 7 - 99 அன்று அதிகாலை இவ்வுலக வாழ்வினை நீத்தார். உத்தமனை நோக்கி செம்மையானவனை பார்த்திரு அவன் முடிவு சமாதானம் என்ற சங்கீதகாரரின் பொன் மொழிக்கேற்ப, அவர் நித்திரையிலேயே தமது முன்னோர்களின் வாசஸ் தலத்தில் தமது மகன் பாதுகாப்பில் இருந்தபோது மரண தேவி அவரை அழைத்துக் கொண்டாள் இன்பமான வாழ்வு இன்பமாகவே முடிவுற்றது! திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் நமது அத்தியட்சாதீனத்தின் பழம் பெரும் தலைவர்களின் ஒருவரான திரு J C அமரசிங்கம் அவர்களின் சிரேஷ்ட்ட புதல்வி. திரு J C அமரசிங்கம் நீண்ட காலம் நல்லூர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் அதிபராக இருந்தவர். சரஸ்வதி என்ற பெயர் தகப்பனாரின் தமிழ் ஆர்வத்தால் இடப்பட்டது. சரஸ்வதியின் சகோதரர்களுக்கு இராமன, பரதன், இலட்சுமணன், சத்துருக்கினன், என்று பெயர்கள் இடப்பட்டன சகோதரிகளுக்கு புஸ்பவதி, தியாகவதி என்று பெயர்கள் இடப்பட்டன சரஸ்வதி கனன் சோமசுந்தரம் மகனாகிய சாமுவேல் சோமசுந்தரத்தை கரம்பிடித்தார். அவரோடு பல நாடுகளுக்குச் சென்று உலகில் நடைபெறும் கல்வி முன்னேற்றங்களை கண்டறியும் வாய்ப்பு பெற்றார்.

1970 ஆண்டில் உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் செல்வி ஹட்சன் பாமசாமி தமது பதவியில் இருந்து இளைப்பாறினார். அப்போது அவரது இடத்திற்கு யாரை நியமிப்பது என்று அத்தியட்சாதீனம் யோசித்து கொண்டிருந்த போது சரஸ்வதியின் சேவை உடுவிலுக்குக் கிடைத்தது. சரஸ்வதி உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்ற போது அக் கல்லூரி அனேக பிரச்சனைகளை சந்திக்க வேண்டி இருந்தது. நிதி பற்றாக்குறை, மாவட்ட காட்டா முறையில் பிற மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் வரல் தடைப்படல், ஆசிரியர்கள் பற்றறாக்குறை என்பன உடுவிலை பெரிதும் பாதித்தன, ஆனால் அத்தகைய சூழலிலும் உடுவிலை திறம்பட நடத்தி அதனை ஒரு சிறந்த நிலைக்கு கொண்டு வந்தார் சரஸ்தி சோமசுந்தரம்! சரஸ்வதி சோமசுந்தரம் லண்டன் B A பட்டதாரி.

கண்டாரை வசீகரிக்கும் தோற்றப்பொலிவும் ஆளுமையும் கொண்டவர். சரஸ்வதி என்ற பெயருக்கு முற்றிலும் பொருத்தமானவராகவே அவர் வாழ்ந்து வந்தார். தன்னுடைய பணி முடிவடைந்து விட்டதென அறிந்து 58 வது வயதில் பதவியில் இருந்து இளைப்பாறி தமது பிள்ளைகளுடன் வாழச் சென்றார். பின்னர் பல தடவை தமது தாய் நாட்டுக்கு திரும்பி நமது ஸ்தாபனங்களில் குறிப்பாக நமது இறையியல் கல்லூரியில் அரும்பணியாற்றினார். தமது 76 வது வயதில் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு திரும்பினார் அவர் விரும்பியதனைப் போல சொந்த நாட்டில் சொந்த ஊரில் சொந்த வீட்டில் அவர் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அவருடைய வாழ்வுக்காக நாம் ஒவ்வொருவரும் இறைவனை போற்ற வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

## குருத்துவ..

யோர். பேராயருடன் இணைந்து தமது கைகளை அருட்பொழிவு பெறுகின்றவர்களின் தலையில் கை வைத்து அருட்பொழிவு செய்தார்கள்.

## திருவிருந்து

அருட் பொழிவு வழிபாட்டை தொடர்ந்து திருவிருந்து வழிபாடு ஆரம்பமானது. பேராயர் கலாநிதி சு ஜெபநேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த சங்கீத வழிபாட்டில் அருட்திரு S C ஆர்னல்ட் அருட்திரு A A போல் ஆகியோர் பேராயருக்கு உதவியாளர்களாக நின்றார்கள். திரு K குலரஞ்சன் திரு P சந்திரசேகரம் திரு K A சின்னத்தம்பி திருமதி மீல்கா அன்றா திருமதி T தயாளகுமார் ஆகியோர் திருவிருந்துக்குரிய அப்பம் திராட்சை ரசம் காணிக்கைகளையும் பலிபீடத்திற்கு கொண்டு வந்தார்கள். இத் திருவிருந்து வழிபாட்டில் 350 பேர் பங்கு பற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பேராயர் கலாநிதி சு ஜெபநேசன் அவர்களின் இறை ஆசியுடன் வழிபாடு நிறைவுற்றது.

குருத்துவ அருட்பொழிவு பெற்ற குடும்பத்தினர்களும் ஆதினமும் இணைந்து இவ் வழிபாட்டுக்கு வந்திருந்த யாவருக்கும் மதிய உணவை ஒழுங்கு செய்திருந்தார்கள். லீவைஸ் போல்டிங் இல்லத்தில் நடைபெற்ற இந்த மதிய உணவு நிழ்வில் 400 பேர் கலந்து கொண்டார்கள்.

மூடனை நூறடி அடிப்பதை பார்க்கிலும் புத்தி மானை வாயினால் கண்டிப்பதே அதிகமாய் உறைக்கும்
நீதிமொழிகள் 17:10

## ஏழைகளோடு ஒன்றித்தல்

நமது நாட்டிலும் நமது திருச்சபையிலும் மிகவேகத்தில் மற்றங்கள் நடந்து வருகின்றன. தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள மக்கள் கிராமங்களில் இருந்து பட்டினங்களுக்கு புலம் பெயர்கின்றனர். பட்டினங்களில் இருந்து தலைநகரத்திற்குப் புலம்பெயர்கின்றனர். தலைநகரில் இருந்து அவுஸ்ரேலியா கனடா போன்ற நாடுகளுக்குக் குடியகல்கின்றனர். இந்த நிலை பல ஆண்டுகளாக நமது பிரதேசத்திலே காணப்பட்ட தெனினும் 1983ம் ஆண்டுக்கு பின்னர் மேலும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

வள்ளுவ பெருந்தகை ''நேற்று உலகில் இருந்தவன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமையை உடையது இந்த உலகம்'' என்று கூறினார். நாமோ! நம்மைச் சுற்றி பார்த்து நேற்று தம் மத்தியில் இருந்தவன் இன்று கனடாவில் என்னும் பெருமை உடையது நமது பிரதேசம் என்று கூறிக் கொள்கின்றோம். இந்த சூழலில் கிறிஸ்துவின் அன்பையும் மிஷனரிமாரின் தியாகத்தையும் நமது முன்னோர்களின் அரும் பிரயாசத்தையும் கட்டிக்காப்பது இங்குள்ள திருச்சபையாரின் கடமையாகும்.

பிற நாடுகளுக்குச் சென்றவர்களைப்பற்றி நாம் இரண்டு விடயங்களை துணிந்து கூறலாம். ஒன்று அவர்கள் ஒருவரும் திரும்பி வரப்போதில்லை! இரண்டாவது அவர்கள் உயிரோடு இருக்கும்வரை தமது தாய்ச்சபைகளில் கரிசனை கொண்டவர்களாகவே இருப்பார்கள். ஆகவே அவர்கள் புலம்பெயர்ந்து விட்டதை நினைத்து புலம்புவதோ! அவர்கள் எமக்கு பயன் இல்லாதவர்கள் என்று எண்ணுவதோ முறையற்றது.

இன்று பல விடயங்கள் நமக்கு சாதகமாக இருக்கின்றன. நம்மை ஊக்குவிக்கவும் பலப்படுத்தவும் அனைத்துலக திருச்சபையுமே ஆர்வங்காட்டி வருகின்றது ஆகவே இன்று நமது அருமைத் தாய்நாட்டில் திருச்சபை ஊன்றிக் கட்டப்பட்ட வழி செய்யப்பட வேண்டும். கிறீஸ்தவம் சுதேச நிலைப் படுத்தப்படவேண்டும். புதிதாக திருச்சபைக்குள் வந்தவர்களுக்குக் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி வசதியும் முன்னேற்றத்திற்கான வேலை வாய்ப்புகளும் வழங்கப்படல் வேண்டும். நமது முதாதையரும் மிகவும் ஏழ்மையான நிலையிலிருந்து மிஷனரிமார் தூக்கி வைத்தமையினால் முன்னேற முடிந்தது கிறிஸ்து ஏழைகளின் நண்பர் இந்த சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' என்று திரும்பத் திரும்பக் கூறினார்.

தென் இந்திய திருச்சபையின் அடுத்த ஐம்பது வருடங்கள் ஏழைகளோடு ஒன்றித்தல் என்ற காலகட்டமாக விளங்கட்டும்.

## அண்ணாவின் பொன்மொழி

இன்பம் இல்லாத இல்லம் ஒரு இருண்ட வீடு.

செல்வர் இல்லங்களில் காணப்படும் சீரும் சிறப்பும் கூடக் காகிதப் பூதான். காண்பதற்கு மட்டுமே காட்சி! மணம் இல்லை அங்கும்.

யாருக்கு எது வாழ்க்கை என்று தோன்றுகிறதோ அதிலே தான் 'மேன்மை' அடைய வேண்டுமென்று தோன்றும்.

கடமை, தவம், தொழில், வாழ்க்கைச் சிக்கல் முதலிய பல கொள்ள வேண்டிபோது இரக்கம் காட்ட முடிவதில்லை. முடியாது- கூடாது.

பாழ்பட்ட மனம் ஒரு மியூசியம் போல இருக்கின்றது. எது கொள்ளத்தக்கதோ அதை ஏற்றுக்கொள்ளுங்கள். எது தள்ளத் தக்கதோ அதை தள்ளிவிடுங்கள்.

ஒழுக்கம் ஒரு பொது நீதி' ஆனால் அது இடத்துக்கு இடம் ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றது. எல்லா மக்களுக்கும் ஒழுக்கம் ஒரே படித்தாயில்லை. பெண்ணுக்கு ஓர் ஒழுக்கம் சொல்கிறோம். ஆண் அதைக் கடைப்பிடிப்பதில்லை. ஏழைக்கு ஓர் ஒழுக்கம் சொல்கிறோம். பணக்காரன் அதைக் கடைப்பிடிப்பதில்லை,

வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும், அனைவராலும் பூர்த்தி செய்துகொள்ள முடிவதில்லை இல்லாமையால இதற்குக் காரணம் செல்வத்தைப் பெருக்கும் சாதனம் சிலரிடமே சிக்கி விட்டதால் ஏற்பட்டுள்ள சீரளிவுதான் காரணம்.

எந்த மனிதனும் மற்றொரு மனிதனுக்கு உபகாரியாகவும் கடைசி பட்சம் தன்னால் மற்றவர்களுக்குத் துன்பம் தராதவனாகவும் இருப்பதே பெரிய ஒழுக்கம்.

வாழ்க்கை முள்ளுள்ள ரோஜா முள். தோலால் மூடப்பட்டபலா. தோலைக் களைந்தெறிந்து, பலாவுடன் பிணைந்துள்ள பசைமையும் நீக்கி சுற்றுத்தோலை அகற்றினால் மட்டுமே சுளை கிடைக்கும் - சுவை உண்டு! பெரும்பாலானவர்களை முள் தைத்து விடுகிறது. அதனைக் களைய நேரம், நினைப்பு, சக்தியற்றவர்கள். உள்ளே சுளை இருக்கிறது என்ற உண்மையையும் மறந்து, வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம் என்ற வேதாந்தம் பேசவும், நம்மால் என்ன ஆகும். என நரம்பொடிந்த தத்துவமாகி காலங் கடத்தி வருகின்றனர்.



பயனில்லாத வாழ்க்கை பரிமளமில்லாத புஷ்பத்தைப் போலிருக்கும்.

கனி கிடைப்பது ரசம்பருக. மலரிலிருப்பது மணம். நுகர. வாழ்க்கை இருப்பது இன்பக் கேணியில் குளிக்க.

## மறுமைப் பிரவேசம்

மறுமைப் பிரவேசம் வண கலாநிதி பிராங்கிலின் ஜெயக்குமார் பாலசுந்தரம் பெங்களூர் இறையியல் கல்லூரியின் இறையியல் விரிவுரையாளர், வண கலாநிதி பிரா கிலின் ஜெயக்குமார் சுந்தரம் சென்ற திங்கட் கிழமை 5.2.99 சடுதியாக காலமானார். ஒரு கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில் இவர் மரணமானதாக தெரிகிறது.

❀ ❀ ❀

## மறுமை பிரவேசம்

உடுவில் மகளீர் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் 11-7-99 ஞாயிறு அதிகாலை தமது இல்லத்தில் நித்திரையில் காலமானர் அன்னாரின் இறுதி ஆராதனை 12.7-99 திங்கட் கிழமை காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று மருதனார் மடம் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

## குருத்துவ அருட்பொழிவு

தென் இந்தியத் திருச்சபை யாழ். பேராயத்தின் உதவி குருக்களாக திருப்பணி ஆற்றிய வண A.K. சுரேந்திரன் வண. டி. மைனசீலன் வண. ஜி. நடராஜா ஆகியோர் இம் மாதம் 17 ம் திகதி (17.7-99) காலை 10 மணிக்கு பேராயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்களால் வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் குருக்களாக அபிஷேகம் சொய்யப்பட்டார்கள்.

### குருவானவர்கள்:

வண. A.K சுரேந்திரன் சாவெட்டியை பிறப்பிடமாகக்கொண்டவர். இவர் தமது பாடசாலைக் கல்வியை முடித்த பின்பு இறை பணிக்காக தம்மை அர்ப்பணித்து யாழ். கிறிஸ்தவ இறையியற் கல்லூரியில் குருத்துவ கல்வியைக் கற்றார். 1993 ம் ஆண்டு இவர் தமது குருத்துவ பயிற்சியை முடித்து இறைப்பணிக்காய் புறப்பட்டார். இவர் வன்னியில் மகிழ்ச்சிபுரம் திருச்சபையிலும் யாழ்ப்பாணத்தில் ஏழாலை வடக்கு தெற்கு திருச்சபைகளிலும் திருப்பணி ஆற்றியுள்ளார் தற்போது உடுப்பிட்டி திருச்சபையின் குருவானவராக இறைபணி ஆற்றிவருகிறார்.

வண. G. மைனசீலன் உடுப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் தமது கல்வியை முடித்த பின்பு இறைபணிக்காக தம்மை அர்ப்பணித்து யாழ். கிறிஸ்தவ இறையியற் கல்லூரியிற் குருத்துவ கல்வியைக் கற்றார். 1993 ம் ஆண்டு இவர் தமது குருத்துவ பயிற்சியை முடித்து இறைபணிக்காய் புறப்பட்டார் இவர் வெள்ளவத்தை தென் இந்திய திருச்சபையில் உதவி ஊழியனாகவும் வன்னியில் அக்காராயன் குளம் திருச்சபையில் ஊழியனாகவும் திருப்பணி ஆற்றியுள்ளார். தற்போது ஆனைக்கோட்டை திருச்சபையின் குருவானவராக இறைபணி ஆற்றி வருகின்றார்.

G. நடராஜா நுவரெலியாவை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் தமது கல்வியை முடித்து யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியராக கடமை ஆற்றிவருகின்றார். இவர் ஆசிரியராக கடமை ஆற்றி வருகின்ற போதே இறை பணிக்காகத் தம்மை அர்ப்பணித்து மதுரை தமிழ்நாடு இறையியற் கல்லூரியில் (T. T. S) தமது குருத்துவ கல்வியை கற்றார். 1998 ம் ஆண்டு தமது குருத்துவ பயிற்சியை முடித்து (B D.) பட்டத்தை பெற்றவராய் நாடுதிரும்பினார். தற்போது காரைநகர் திருச்சபையில் குருவானவராக பணி ஆற்றி வருகிறார்.

### அருளுரை

17 ம் திகதி காலை 10மணிக்கு பேராயர் கலாநிதி சு. ஜெபநேசன் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. குரு அபிஷேசக வழிபாட்டில் வண. V. N. தர்மகுலசிங்கம் அவர்கள் அருளுரை ஆற்றினார். யோவான் 10: அதிகாரம் 10 ம் வசனத்தின் அடிப்படையில் அவரது அருளுரை அமைந்திருந்தது. நானே நல்ல மேய்ப்பன் நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனையும் கொடுக்கின்றான், திருமறைப் பாடங்களை திரு. விண்டன் தேவராஜா திரு. நாகையா வண. T. H வசந்தகுமார் ஆகியோர். வாசித்தார்கள்.

### பேராயருடன் வைத்தவர்கள்

குருத்துவ அருட்பொழிவு பெற்றவர்களை முன் நிறுத்தியோர் அருட்திரு V. ராஜ்குமார் அருள் திரு T. தேவநேசன், அருள் திரு. A. A போல் ஆகியோர். அருள்திரு V. ராஜ்குமார், அருள் திரு A. V. ஜேசுதாசன் அருள் திரு S I ஆனந்தராஜா அருள் திரு N T ஜெயநேசன் அருள்திரு T E அசோக்குமார் அருள் திரு T B தேவருட் செல்லம் அருட்திரு A S தேவகுணானந்தன் ஆகி

(2ம் பக்கம் பார்க்கவும்)

## Education and Jaffna Man

Late Dr. Robert Homles had written in his book "JAFFNA 1980" that for Jaffna man education is for employment and not for improving or ornamenting his mind. He also said that most of the people in Jaffna have no academic interest. They do not read books. How true he was in making such statements. As for the academic interest, this is the problem we face with the students in Jaffna. Many teachers (for that matter those with reading habit constitute only a minority group among teachers) find it difficult to get their students read books and research in common topics. High Shool children are reluctant to read books. They feel that it is a waste of time. Reading time, they think, can be better utilized to study their lessons. Only books a Senior High School student wants to read are his/her text books, even that with reluctance. They prefer notes given by their tutors.

Today, it has become a fashion for students to go to tutories, one tutory after another. There is no leisure time for them. All they do is to study and study with the vain hope that they will enter the University. Their minds are so conditioned that they are unable to think of avenues outside the University. Thus these people have become a burden to the Society.

Jaffna Society has, so far not produced any intellectual (apologics to a few who think that they are intellectuals). An intellectual according to Chambers Dictionary is one with superior intellect; one who can think rationally. A rationally thinking person should be able to guide the correct path. Today we find the academics being guided by some hidden force. They bow down before the society and say yes to all. Their destiny is guided by others instead of them guiding the destiny of the Society which they belong to.

The academics (not intellectuals) do not want (or is it that they dont know) to say the right, This has resulted in the progressive deterioration of the Jaffna Society.

So far, the Universities in Sri Lanka had produced only professionals not intellectuals. These professionals are interested only in their personal economic development. An intellectual, because of his superior rational thinking would have spent his time improving his Society. There is a dearth of professionals in Jaffna. Hospitals do not have enough doctors; There are not many engineers for reconstruction and development of Jaffna and Jaffna lacks people for planning and plan implementation.

Foreigners and a few from South Sri Lanka are here to reconstruct and re-develop Jaffna but he many professionals produced out of Jaffna Society are, today prospering in western, affluent countries. An intellect is one who serves God and people. On the other hand a professional— Professional has an entirely different meaning, but the conduct of many has changed the meaning — is bent on his personal development. To such there is a paradigm shift from 'to serve' to 'to be served'.

We need today is the paradigm reshift, i e from education for personel development to education for the development of the society.



### *Remembering Rev J. S. CHRISTMAS*

Rev. J. S. Christmas was one of the Senior Pastors of the American Ceylon Mission. He was born at Vannarponnai and was educated at Batticotta Seminary.

He served in the non-academic staff of Uduvil Girls, College for two years. Between 1844 - 1950 he served in Colombo. He amassed much wealth- But earthly glory and wealth did not give him any satisfaction.

In 1855 he joined as Catechist in the Church Missionary Society and served at Chundikuli and Mugamalai In 1864 he joined the American Ceylon Mission and served at Velanai, Chavakachcheri and Tellippalai.

1904 he retired at Araly in his ancestral home. He passed away on 25th December 1904.

Rev. Christmas was a Tamil Scholar. The lyric உச்சித மோட்ச பட்டணம் போக he composed, is sung in almost all the funerals in Jaffna.

### *Jaffna College..*

Memorial Foundation. In 1988 he attended the Graduate school in Ecumenical Institute, Bossey, Switzerland and obtained a Certificate in Ecumenical studies. In 1998 he secured his M. A. Degree in Computers in Education at Kings College of Londaon. University He is also a certified Counselor.

Mr. N. A. Vimalendran counts twenty-five years of continuos service at Jaffna College. At present he is the Junior Secondary Supervisor of Jaffna College. He aslo served as Acting Vice - Principal of the College in 1996 / 97. Mr. Vimalendran married Anoja Selvaratnam who is a teacher at Jaffna College. She is a grand-daughter of late S. T. Jeevaratnam and late J. A Selvadurai both former teachers of Jaff a College. Vimalendrans have two sons who are now students of Jaffna College.

## Day Care Centre Sports Meet

The Sports Meet of the Alaveddy Day Care Centre was conducted on Monday the 26th July 1999. The function was presided over by Rev T. E Ashokumar, Parish Priest.

## Flight Delayed

The third flight from Colombo on Saturday 23rd July 99 reached Jaffna at 7: 30 p. m. since the passengers could not go to their houses due to night cerfew, they were asked to spend the night at the Our Lady of Refugee School, Jaffna.

### *CONGRATULATIONS*

The 'Morning Star' congratulates Mr. A. Gnanadasan who has been appointeed Deputy Solicitor General of the Democratic Republic of Sri Lanka as from July 1999.

Mr. Gnanadasan is the son of late V. N. Ayathurai and Mrs. Ayatharai of Chavakacheri. He had his education at Drieberg College, Chavakachcheri, Jaffna College, Vaddukoddai and at Law, College, Colombo. He was also given Scholarships by the Government of Sri Lanka to pursue studies in Legal and Constitutional Matters.

## IN MEMORIUM



*I st DEATH ANNIVERSARY*

### *SINNATHAMBY JOE MANICKAM*

**Born 02 - 12 - 1931**

**Entered Glory 31 - 07 - 1998**

*"Fought a good fight of faith*
*Ran a good Race*
*Received the Crown of Glory"*

Fondly Remembered by his Beloved wife Rasathy. Daughters Daya, Kala Son Paran Son - in law Suganthan

"Chandran Illam"
Pandateruppu.

## OBITUARY

### *Mrs Grace Parimalanayagam*

We are sorry to record the death of Mrs. Grace Parimalanayagam Atputharajah which took place on Sunday the 8th July 1999 in Colombo She was the daughter of the late Mr& Mrs Sanmugam Thuriappiah and wife of Sinniah Cyril Atputharajah and sister of late Mangalanayagam, Arumainayagam, Thissanayagam, Gunanayagam and Pillainayagam (Canada) Arunthavanayagam (Colombo) and mother of Rev Cyril Mathanarajah (Germany), Late Sugunarajah Sathiaraj (Puttlam) and Mrs Sakunthaladevi Roberts.

The funeral took place on Thursday 22nd July 1999. A service of remembrance was conducted at the residence of Mr S R Jesupalan at Ananda Avenue, Uduvil.

Registered as a News Paper at the G P. O. Sri Lanka- News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, Diocesan Complex Vaddukoddai on Friday the of 30th July 1999 published by Rev G Nadaraja Diocesan office, Vaddukoddai.